# பட்டிணமும் சூழலும் பிரதேச சபை

# திருக்கோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 27ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 03ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் படியான வங்கி மீதி முறையே ரூபா.550,058 மற்றும் ரூபா.614,958 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மீதியாக முறையே ரூபா.878,315 மற்றும் ரூபா.586,446 காட்டப்பட்டதனால் வங்கி மீதி ரூபா.299,745 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகப் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.6,230,707 தொகையானது கணக்குகளுக்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காகப் பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.2,887,023 தொகையானது கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.309,702 மொத்த தொகையான முற்பணங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2010ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.2,609,679 மொத்த தொகையான முற்பணங்கள் மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா.3,213,291 கூட்டுத் தொகையான அரசிறைகள் அறவிடப்படாது மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்றது.

(ஈ) ரூபா.1,542,723 கூட்டுத் தொகையான பதினைந்து சில்லறைக் கடன் கொடுத்தோர் மீதிகள் கொடுத்து தீர்க்கப்படாது ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்றன.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணிகளும், கட்டிடங்களும் | 79,151,944 | காணி மற்றும் கட்டிடங்களிற்கான பதிவேடு |
| மோட்டார் வாகனங்கள் | 13,690,632 | நிலையான சொத்துப் பதிவேடு |
| பொறி இயந்திரம் | 2,547,653 | |
| கடன் கொடுத்தோர் | 1,542,723 | கடன் கொடுத்தோர் பேரேடு |

| | | |
|---|---|---|
| நானாவித வைப்புக்கள் | 15,813,186 | காலப்பகுப்பாய்வு |

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதிகள் | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் | |
| (i) நி.பி 396 | மூன்று வருடங்களுக்கு முன்னர் சபையால் வழங்கப்பட்ட ரூபா.10,300 கூட்டு மொத்த பெறுமதியான ஆறு காசோலைகள் பணமாக மாற்றுவதற்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் அவை தொடர்பாக உரிய ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 880 | காசு மற்றும் களஞ்சியம் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.5,291,015 ஆகும். இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்திற்கு மேலான செலவினம்

ரூபா.1,466,285 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.6,757,300 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 2.2 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2013 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2013 உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை 31.12.2013 |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகளும் வரிகளும் | 8,804 | 8,266 | 2,292 |
| வாடகைகள் | 2,000 | 1,660 | 476 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,231 | 1,717 | 10 |
| ஏனைய வருமானம் | 39,224 | 35,788 | 434 |

## 2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா.1,947,465 கூட்டு மொத்தமான வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை நிறுவப்பட்டுள்ள 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணங்கள் அறவிடப்படாததால் மீளாய்வாண்டின் இறுதிவரை சபை ரூபா.231,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) 2011ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து அறவிடப்பட்ட் ரூபா.109,340 தொகையான முத்திரை கட்டணம் உள்நாட்டு இறைவரி திணைக்கத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நானவித வைப்புக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

(ஆ) பிரமாண அடிப்படை நிகழ்ச்சித் திட்டத்தின கீழ் சேதனக் கூட்டுப் பசளை தயாரிப்பதற்காக 2013 யூலை 02 ஆந் திகதி 158 கொள்கலன்கள் ரூபா.498,268 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் இவற்றில் ரூபா.384,738 கிரயமான 122 கொள்கலன்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படமால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஓதுக்கீட்டின் மூலம் ரூபா. 2,361,530 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2012 செத்தெம்பர் 26 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்ட வெள்ளைமணல் சந்தையை கணக்காய்வுத் திகதியான 2015 சனவரி 02 ஆந் திகதி வரை உரிய நேக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபையின் நான்கு வாகனங்கள் ரூபா.239,079 தொகை செலவு செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட போதிலும் வாகனப் பொறியியலாளரிடமிருந்து வாகனம் திருப்தியாக திருத்தம் செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் அறிக்கை பெறப்படாமல் அதற்குரிய கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் வாசகர்களுக்கு வழங்கப்பட்ட 81 நூலகப் புத்தகங்களை வாசகர்களிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. ஒப்பந்த நிர்வாகம்

(அ) சந்தைக்கட்டிட நிர்மாணம்

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா.2,505,339 கிரயத்தில் சந்தைக்கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக பட்டணமும் சூழலும் பிரதேச சபையினால் 2011 திசெம்பர் 12 ஆந்

திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பான அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இக்கட்டடம் 03 மாத காலத்தினுள் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் 06 மாத கால தாமதத்தின் பின் 2012 செப்தெம்பர் 26 ஆம் திகதியே நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 12 கடைகளைக் கொண்ட இச்சந்தைக் கட்டடத்தின் தளத்திற்கு கொங்கிறீட் இட்டு மெருகுபடுத்துவதற்கு ரூபா.94,998 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய நியமத்தின் பிரகாரம் கொங்கிறீட் இடப்படாமையால் தளம் முழுவதும் வெடித்தும் கீழிறங்கியும் காணப்பட்டன.

(ஆ) மயானம் துப்பரவு செய்தல் வேலைகள்
------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் கன்னியா மாங்காய்யூற்று மயானத்தை டோசர் இயந்திரத்தைப் பயன்படுத்தி துப்பரவு செய்தமைக்காக ரூபா.251,500 தொகை செலவு செய்யப்பட்டது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பிரதேச சபை நிதி ஒழுங்கு விதிகள் அத்தியாயம் ஏஜஜஜ இன் பிரிவு 78(5) இன் பிரகாரம் ரூபா.100,000 தொகைக்கு மேற்பட்ட வழங்கல் சேவைகளுக்கு பகிரங்க கேள்வி கோரப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும் பகிரங்க கேள்வி கோரப்படாது இவ்வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) 50 மணித்தியாலங்கள் வேலை செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்ட போதிலும் அந்த இயந்திரம் 50 மணித்தியாலங்கள் வேலை செய்யப்பட்மையினை உறுதிப்படுத்தி தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து ஏதும் சான்றுகளோ அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய வேறு ஏதும் சான்றுகளோ வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.1 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்
------------------------------------------------------------------------------

பின்வரும் சொத்துக்கள் அவற்றிக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

| சொத்து விபரம் | பொருட்களின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|
| தள்ளுவண்டி (ுூாநநட டியசசழுற) | 20 | 04 வருடங்கள் |
| றோனியோ இயந்திரம் | 02 | |
| கீபோட் றேய் | 03 | |
| கொங்கிறீட் மிக்சர் இயந்திரம் | 01 | 03 வருடங்கள் |
| கதவு பூட்டு | 06 | 02 வருடங்கள் |
| நீர்வடிகட்டி | 03 | 01 வருடம் |

**5.** மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 | -- | -- |
| உதவியாளர்கள் | 27 | 23 | 04 | -- |
| சிற்றூழியர்கள் | 61 | 45 | 16 | -- |
| ஏனையவர்கள் | -- | 70 | -- | 70 |

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச்

சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 39மூ தொடக்கம் 93மூ வரையான முரணகள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

i. கணக்கீடு

ii. நிலையான சொத்துக் கட்டுப்பாடு

iii. வருமான சேகரிப்பு

iv. பெறுகை நடைமுறை

v. ஒப்பந்த நிர்வாகம்